News Release

# புது தில்லியில் நடைபெறும் 2023-ஆம் ஆண்டு ஆட்டோ எக்ஸ்போ காம்போனென்ட் கண்காட்சியில் ஈமொபிலிட்டி தீர்வுகளை போர்க்வார்னர் காட்சிப்படுத்தவுள்ளனர்

- *மின்மயமாக்கப்பட்ட பவர்டிரெய்ன் பாகங்கள், உயர் ஆற்றல் கொண்ட பேட்டரி அமைப்புகள் மற்றும் உயர் மின்னழுத்த குளிரூட்டும் ஹீட்டர்கள் போன்ற புதுமையான தெர்மல் மேனேஜ்மென்ட் தீர்வுகள் காட்சிப்படுத்தப்படும்*
- *இந்தியாவில் முதல் முறையாக மின்மயமாக்கல் உத்தியான "சார்ஜிங் ஃபார்வர்டு" முறையை நிறுவனம் காட்சிப்படுத்தும்*

***நேஷனல், டிசம்பர் 14, 2022*** – அடுத்த மாதம் இந்தியாவின் புதுதில்லியில் நடைபெறும் ஆட்டோ எக்ஸ்போ காம்போனென்ட் 2023 கண்காட்சியில் நிறுவனத்தின் புதுமையான மற்றும் நிலையான தயாரிப்புகள் எவ்வாறு ஈ-மொபிலிட்டிக்கு மற்றம் அடைந்து OEM-களுக்கு உதவுகின்றன என்பதை போர்க்வார்னர் விளக்கவுள்ளது. பேட்டரி அமைப்புகள், சார்ஜிங் நிலையங்கள், மின்சார மோட்டார்கள், ஒருங்கிணைந்த டிரைவ் மாட்யூல்கள், பவர் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் உயர் மின்னழுத்த குளிரூட்டும் ஹீட்டர் போன்ற உயர் செயல்திறன் கொண்ட வெப்ப மேலாண்மை தயாரிப்புகள் உள்ளிட்ட வாகன மின்மயமாக்கலை ஆதரிக்கும் பரந்த அளவிலான தொழில்நுட்பங்களை **ஹால் A4FF, பூத் C27** இல், நிறுவனம் காட்சிப்படுத்தவுள்ளது.

**"போர்க்வார்னரின் தயாரிப்புகள் மற்றும் அமைப்புசார் தீர்வுகளை முன்னிலைப்படுத்தவும், மின்மயமாக்கல் முயற்சிகளை விரைவுபடுத்துவதையும், 2035-ஆம் ஆண்டிற்குள் கார்பன் நடுநிலையை அடைவதை நோக்கமாகக் கொண்ட எங்கள் "சார்ஜிங் ஃபார்வர்டு எனும் " உலகளாவிய நிறுவன உத்தியைப் பற்றிய நுண்ணறிவுகளை வழங்கவும் ஆட்டோ எக்ஸ்போ ஒரு சிறந்த தளமாகும்"** என்று போர்க்வார்னர் எமிஷன்ஸ் சிஸ்டம்ஸ் இந்தியா பிரைவேட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சுதிர் சாவ்லா கூறினார். **"இந்தியாவில் உள்ள எங்கள் போர்க்வார்னர் தொழில்நுட்ப மையங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறைகள் இந்த முயற்சியின் கீழ் வரையறுக்கப்பட்ட இலக்குகளை அடைவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன, இது பாரத் ஸ்டேஜ் சிக்ஸ் போன்ற கடுமையான இந்திய உமிழ்வு**

**தரநிலைகளை பூர்த்தி செய்வதில் உள்ளூர் வாடிக்கையாளர்களுக்கு உதவுகிறது."** என மேலும் கூறினார்.

போர்க்வார்னரின் பூத்தில் காண்பிக்கப்படும் தயாரிப்பு சிறப்பம்சங்களில், இலகுவான மின்சார வணிக வாகனங்கள் (eCVகள்) மற்றும் பேருந்துகளின் அடிப்பகுதிக்கு ஏற்றவாறு புதிய, பிளாட் மாட்யூல் கட்டமைப்பைக் கொண்ட உயர் ஆற்றல் கொண்ட பேட்டரி அமைப்பு ஆகியவை அடங்கும். ஒரு புதிய, மாடுலர் உயர் மின்னழுத்த இ-ஃபேன் தீர்வு மற்றும் போர்க்வார்னரின் சமீபத்திய தலைமுறை இன்வெர்ட்டர்களும் இதில் இடம்பெறும். வர்த்தக வாகனங்களுக்கான ஹைட்ரஜன் எரிபொருள் உட்செலுத்துதல் அமைப்புகள் போன்ற முன்னோக்கிய எரிப்பு தொழில்நுட்பங்களுடன் கூடுதலாக, போர்க்வார்னர் முக்கிய வழக்கமான உந்துவிசை தீர்வுகளையும் காட்ச்சிப்படுத்தும்.

ஆட்டோ எக்ஸ்போ காம்போனென்ட் கண்காட்சி ஜன.12-15, 2023, புது டெல்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் நடைபெறும். 1,500-கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் மற்றும் 115,000 பார்வையாளர்கள் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆசியாவின் மிகப்பெரிய இந்த வாகன கண்காட்சியானது இந்தியாவின் வாகன உதிரிபாக உற்பத்தியாளர்கள் சங்கம், இந்திய தொழில் கூட்டமைப்பு மற்றும் இந்திய ஆட்டோமொபைல் உற்பத்தியாளர்கள் சங்கம் ஆகியோரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**போர்க்வார்னர் குறித்து**

130 ஆண்டுகளுக்கும் மேலாக, மொபிலிட்டி சார்ந்த சிறப்பான கண்டுபிடிப்புகளைக் கொண்டுவரும் ஒரு மாற்றத்தக்க உலகளாவிய தயாரிப்புத் தலைவராக போர்க்வார்னர் இருந்து வருகிறது. அனைவருக்கும் தூய்மையான, ஆரோக்கியமான, பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்க உதவும் வகையில் ஈமொபிலிட்டி சார்ந்த மாற்றத்துக்கு உலகை துரிதப்படுத்த முயல்கிறது.



போர்க்வார்னர் அதன் பேட்டரி பிளாட் மாட்யூல் கட்டமைப்பை ஆட்டோ எக்ஸ்போ 2023 இல் காட்சிப்படுத்தும்